உ
சிவமயம்

*"காடு வெட்டிப் போட்டு கடிய நிலந்திருத்தி*
*வீடு கட்டிக் கொண்டிருக்கும் வேள் வணிகர்-வீடுகட்கு*
*அன்றைக்கு வந்த எங்கள் அம்மா! இலக்குமியே!*
*என்றைக்கும் நீங்கா திரு!"*
*-பாடுவார் முத்தப்பச்செட்டியார்*

# ஆசிரியர் பக்கம்

அன்புள்ள அங்கத்தினர்களே,

புதிய செயற்குழுவின் முதல் செய்தி கடிதம் வழி உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.

சென்ற இதழின் செயலகத்திலிருந்து பகுதியில், நிறைவு பத்தியில் "இறையருள் கூடி வந்தால் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் மீண்டும் சந்திப்போம்" என்று முடித்திருந்தேன். அந்த சமயத்தில் மீண்டும் செயற்குழுவில் இடம் பெறுவேன் என்று நினைக்கவில்லை. செயற்குழுவில் பணியாற்ற மேலும் ஒரு வாய்ப்பு வழங்கிய உங்கள் அனைவருக்கும் என் நன்றி. மேலும் என்னை செய்தி கடித ஆசிரியர் குழுவின் தலைவராக நியமித்த சங்க செயற்குழுவுக்கும் என் நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன்.

இனி செய்திக் கடிதம் மூன்று மாதத்துக்கு ஒருமுறை அதாவது ஜூன், செப்டம்பர், டிசம்பர், மார்ச் முதல் வாரங்களில் வெளிவரும்.

நன்றி வணக்கம்.
**மா. மெய்யப்பன்**



# மூளையைத் தூங்க விடாதீர்கள்

**பொ**துவாக நினைவாற்றல் என்பது அனைவருக்கும் மாபெரும் தேவை. நினைவாற்றல் சுமாராக இருப்பவர்கள் கூட நினைவாற்றலை வளர்த்துக் கொள்ள மூன்று முக்கியமான வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டும்.

1. **கவனமான பார்வை**
2. **ஆர்வம், அக்கறை**
3. **புதிதாகச் சிந்தித்தல்**

இந்து மூன்றிற்குமே சிறப்பான பயிற்சி தேவை. அந்தப் பயிற்சிக்காக எந்தப் பயிற்சிக் கூடத்திற்கும் செல்ல வேண்டியதில்லை. நமக்கு நாமே பயிற்சி அளித்துக் கொள்ளலாம்.

அதற்கான சில பயிற்சி முறைகளைப் பார்ப்போம்.

## முதலாவதாத ஒரு பயிற்சி.

ஒன்றிலிருந்து நூறு வரை எண்ணுங்கள். பிறகு 2, 4, 6 என்று இரண்டு இரண்டாக எண்ணுங்கள். பிறகு 100 லிருந்து தலைகீழாக 100, 98,96 என்று இரண்டு இரண்டாகக் குறைத்து எண்ணுங்கள். பிறகு நான்கு நான்காகக் குறையுங்கள். இப்படியே, 5,6,7 வரை தாவித் தாவி குறைத்து எண்ணுங்கள். இப்படி ஏழு ஏழாக குறைத்து எண்ணக் கற்றுக் கொண்டீர்கள் என்றால், உங்களுடைய நினைவுத் திறன் நல்ல அளவில் வளர்ந்திருக்கிறது என்று அர்த்தம்.

புத்தகங்களைப் படிப்பது, காலையில் ஐந்து மணிக்கெல்லாம், எழுந்திருந்து அன்றைய நிகழ்ச்சிகளைத் திட்டமிடுவது, அப்பியாசங்களை செய்வது இதனாலெல்லாம் கூட உங்கள் சிந்திக்கும் திறனையும், நினைவுத்திறனையும் வளர்த்துக் கொண்டே போகலாம்.

உடலின் ஒவ்வொரு உறுப்பும் ஓர் இயந்திரம். அதிலும் இதயமும், மூளையும், ஓய்வில்லாத இயந்திரங்கள். இதயம் ஓய்வு எடுத்துக் கொண்டால் வாழ்க்கை நின்று விடும். மூளைக்கு ஓய்வு கொடுத்தால் அது துருப்பிடித்துப் போய் ஒன்றுக்கும் பயனற்று வாழ்க்கை முன்னேற்றம் நின்று போய்விடும்.

ஆகையால் எந்த நேரமும் மூளைக்கு ஏதேனும் வேலை கொடுத்துக் கொண்டே இருங்கள். நினை-வாற்றலை மேம்படுத்துங்கள். நினைத்ததைச் சாதியுங்கள்.

***நன்றி: மங்கையர் மலர்***
***அனுப்பி உதவியவர்:***
***திருமதி ஞானம் பிகை சேது***

# செயலகத்திலிருந்து

அன்புடையீர்,

வணக்கம். புதிய செயற்குழுவின் சார்பில் உங்களை எல்லாம் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். இனி நடைபெற்ற நிகழ்ச்சியை தொகுத்து தருகின்றேன்.

**<u>டத்தோ SP. அண்ணாமலை அவர்களுக்கு பாராட்டு விழா 19-3-2006</u>**

நமது சங்கத்தின் 23வது ஆண்டுப் பொதுக்கூட்டம் கடந்த 19-3-2006 அன்று நடைபெற்றது. அந்த பொதுக்கூட்டத்திற்கு முன்பு "டத்தோ" விருது பெற்ற நம் சங்கத்தின் முன்னாள் உதவித் தலைவர், பினாங்கு நகரைச் சேர்ந்த டத்தோ SP. அண்ணாமலை அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

மாலை 4.30 மணிக்கு மழையுடன் ஆரம்பிக்கப்பட்ட விழாவில் புலவர் அருணாசலம் அவர்கள் இறை வணக்கம் பாட விழா இனிதே தொடங்கியது.

முதலில் பினாங்கைச் சேர்ந்த செல்வன் லேனா சீனிவாசனின் கர்நாடக இசைக் கச்சேரி நடைபெற்றது. அருமையாக பாடி அனைவரின் பாராட்டுக்களையும் பெற்ற செல்வன் லேனா சீனிவாசனுக்கு சங்கத்தின் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

சங்கத்தின் தலைவர் திரு. M. கிருஷ்ணன் அவர்களின் வரவேற்புரையுடன் பாராட்டு விழா தொடங்கியது.

திரு. M. கிருஷ்ணனின் வரவேற்புரையில், கடந்த 6 ஆண்டுகளில் அவர் தலைமையில் செயல்பட்ட மூன்று செயற்குழுக்களும் டத்தோ பட்டம் பெற்றவர்களுக்கு பாராட்டு விழா நடத்தியதை நினைவு கூர்ந்தார்கள். மேலும் ஒரு பாராட்டு விழா இன்று நடைபெறுவது மகிழ்ச்சியை தருவதாகவும் சொன்னார்கள்.

டத்தோ டாக்டர் N. சுப்பிரமணியம், டத்தோ SP. அண்ணாமலை பற்றி அறிமுக உரையாற்றினார்கள். அவர்கள் தம் உரையில் டத்தோ SP. அண்ணாமலை அவர்கள் நம் சங்க கட்டிட நிதி வசூலின் போது பினாங்கு, கூலிம், சுங்கைப்பட்டாணி, அலோஸ்டார் போன்ற நகரங்களுக்கு சென்று கூடவே வந்து சங்க கட்டிடத்திற்கு நிதி திரட்டி தந்ததையும், சங்கத்தின் உதவி தலைவராக இருந்து பணியாற்றியதையும் நினைவு கூர்ந்தார்கள்.



பிறகு டத்தோ டாக்டர் V. கதிரேசன் அவர்கள் டத்தோ SP. அண்ணாமலை அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தி சிறப்பித்தார்கள். பிறகு டத்தோ SP. அண்ணாமலை அவர்கள் ஏற்புரை ஆற்றினார்கள். அவர்களுடைய ஏற்புரையில் டத்தோ விருது பெற்றதற்கு நடைபெறுகின்ற இந்த பாராட்டு விழா பெரும் மகிழ்ச்சியை தருவதாகவும், அதுவும் நம் சமூகத்தினர் ஒன்று கூடி இந்த விழா நடத்துவது மேலும் சந்தோஷத்தை தருவதாகவும் கூறினார்கள். சங்கத்தின் வளர்ச்சிக்கு தன்னால் முடிந்ததை செய்வதாகவும் கூறினார்கள்.

செயலாளர் திரு. மா. மெய்யப்பனின் நன்றி உரையுடன் பாராட்டு விழா ஒரு நிறைவை எய்தியது.

**<u>23வது ஆண்டுப் பொதுக்கூட்டம் 19-3-2006</u>**

மாலை 5.45 மணி அளவில் பொதுக்கூட்டம் தொடங்கியது. முதலில் தலைவர் திரு. M. கிருஷ்ணன் அவர்கள் உரையாற்றினார்கள். அவர் தம் உரையில் சங்கக் கட்டிடத்திற்கு வங்கியில் இருந்து பெறப்பட்ட கடனை முழுவதுமாக செலுத்தி இருப்பதையும், சங்கக் கட்டிடம் முழுவதும் வர்ணம் பூசப்பட்டு, புதுப்பிக்கப்பட்டதையும், 2005-2006ம் ஆண்டில் 5 டத்தோக்களுக்கு பாராட்டு விழா நடத்தியதையும், இந்த ஆண்டுத் தொடக்கத்தில் MTA SPORTS CARNIVAL 2006 வெற்றிகரமாக நடத்தியதையும், நினைவு கூர்ந்தார்கள். மேலும் இந்த அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் உறுதுணையாக இருந்த திரு. மா. மெய்யப்பன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும், சங்கத்தின் டிரஸ்டிகளுக்கும் எல்லா நிகழ்ச்சியிலும் கலந்து சிறப்பித்த உறுப்பினர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

22வது ஆண்டுப் பொதுக்கூட்ட குறிப்பை செயலாளர் திரு. மா. மெய்யப்பன் வாசிக்க அது ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் பிறகு ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டு அதுவும் ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதன் பிறகு பொருளாளர் திரு N. நாகராஜன் சென்ற ஆண்டுக்கான கணக்கறிக்கையை தாக்கல் செய்தார்கள். உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கப்பட்டது, பிறகு அதுவும் ஏக மனதாக ஏற்றுக்கொள்கப்பட்டது.

அதன் பிறகு புதிய செயற்குழுவிற்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது. சங்கத்தின் டிரஸ்டிகளான திரு. G. இராமனாதன் மற்றும் திரு. SP. தியாகராஜன் சங்கத்தின் செயற்குழுவிற்கான தேர்தலை நடத்தி தந்தார்கள்.

புதிய செயற்குழுவிற்கான பெயர்களை டாக்டர் S. சோமசுந்தரம் முன் மொழிந்தார்கள்.

டத்தோ டாக்டர் N. சுப்பிரமணியம் வழி மொழிய கீழ்க்கண்ட அனைவரும் ஏக மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டதாக திரு. G. இராமனாதன் அவர்கள் அறிவித்தார்கள்.

**புதிய செயற்குழுவினர்கள் பின் வருமாறு:-**

| | | உறுப்பினர் எண் |
|---|---|---|
| தலைவர்: | திரு. M. சின்னத்துரை | 240 |
| உதவித்தலைவர்: | திரு. Y.RM. ஆண்டியப்பன் | 420 |
| செயலாளர்: | திரு. P. இராமன் | 796 |
| உதவிச்செயலாளர்: | திரு. M. நல்லகருப்பன் | 1070 |
| பொருளாளர்: | திரு. S. பழனியப்பன் | 674 |
| உதவிப்பொருளாளர்: | திரு. R. பழனியப்பன் | 1071 |
| **செயற்குழு உறுப்பினர்கள்:** | திரு. M. கிருஷ்ணன் | 773 |
| | திரு. M. பழனியப்பன் | 229 |
| | திரு. M. மெய்யப்பன் | 666 |
| | திரு. AR. சுப்பிரமணியம் | 625 |
| | திரு. N. சோமநாதன் | 681 |
| | டாக்டர் S. அருண் | 942 |
| | திருமதி விமலா மோகன் | 991 |
| | திருமதி மீனாட்சி இராமனாதன் | 1069 |
| | திருமதி அழகம்மை லெட்சுமணன் | 1053 |
| **கணக்காய்வாளர்கள்:** | திரு. K. பழனியப்பன் | 37 |
| | திரு. T. ரவி | 950 |

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்குழுவின் தலைவர் திரு. M. சின்னத்துரை அவர்கள் உரையாற்றினார்கள். அவர்களுடைய உரையில் சங்கத்தின் பெயரில் ஒரு கூட்டுறவு கழகம் அமைப்பதற்கான வேலைகள் முடிவடைந்து அதற்கான பெயரும் சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளால் வழங்கப்பட்டு இருப்பதாதவும், KOPERASI THANAVAISYA KUALA LUMPUR BERHAD என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட இருக்கும் கூட்டுறவு கழகத்தில் அனைத்து உறுப்பினர்களும் தவறாது பங்கு கொண்டு அது வெற்றிகரமாக செயல்பட பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

உறுப்பினர்களின் கலந்தாலோசனைகளுக்கு பிறகு திரு பெ. இராமன் நன்றி உரையுடன் கூட்டம் இனிதே முடிவடைந்தது.



## வட்டாரச் செயலாளர்கள் நியமனம்

நமது சங்கத்தின் வட்டாரச் செயலாளர்களாக கீழ்க்கண்டவர்களை செயற்குழு ஏகமனதாக நியமித்து இருக்கிறது. அந்த அந்த வட்டாரத்தில் வசிப்பவர்கள் அவர்களைத் தொடர்பு கொண்டு செய்தி கடிதத்திற்கு வழங்க வேண்டிய செய்திகளை வழங்குவதுடன், சங்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்குமாறும் செயற்குழுவின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

| | | உறுப்பினர் எண் |
|---|---|---|
| ஜோகூர்பாரு: | திரு. S. மீனாட்சி சுந்தரம் | 1006 |
| மூவார்/மலாக்கா: | திரு. AR. ஆதப்பன் | 626 |
| நெகிரி செம்பிலான்: | திரு. RM. அழகப்பன் | 207 |
| சிலாங்கூர்: | திரு. N. கணேசன் | 784 |
| பேராக்: | திரு. S. தண்ணீர்மலை | 383 |
| பினாங்கு: | திரு. M. நாராயணன் | 1017 |
| கெடா/பெர்லிஸ்: | டத்தோ S.NK. அழகுசுந்தரம் | 403 |
| பகாங் : | திரு. R. ராமராகவன் | 109 |
| கிளந்தான், திரங்கானு: | டாக்டர் N. ஜெகநாதன் | 688 |

வட்டாரச் செயலாளர்கள் அனைவருக்கும் சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

## திருமதி PL. உமையாள் ஆச்சி கல்வி விருது விழா 2006 (30-4-2006) இடம்: டத்தோ KR. சோமா அரங்கம்

கடந்த 30-4-2006 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு மாலை தேநீர் உடன் கோலாலகலமாக இந்த விழா தொடங்கியது.

செல்வி விசாலாட்சி கணேசன் இறைவணக்கம் பாடி விழாவை தொடக்கி வைத்தார்கள். இந்த விழாவின் ஏற்பாட்டுக்குத் குழுத் தலைவர் திரு. M. பழனியப்பனும், திருமதி ராதா கணேசனும் விழாவை வழி நடத்தினார்கள்.

செல்வி வள்ளியம்மை சிதம்பரத்தின் Mono Acting உடன் கூடிய நடன நிகழ்ச்சிக்கு பின் நம் சங்கத்தின் தலைவர் திரு. M. சின்னத்துரை அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். அதில் இருந்து ஒரு பகுதி.

*“இன்று பரிசு பெறும் 28 மாணவ மாணவிகளுக்கு சங்கத்தில் சார்பில் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்கள் அடைந்து இருக்கும் மகிழ்ச்சியிலும் பங்கு கொள்கின்றேன். Dato P. காசி அவர்களும் சிறப்பான மாணவ மாணவிகளை ஆண்டு தோறும் ஊக்குவித்து பரிசுகளை வழங்கி வருவது*

*போற்றுதலுக்குரியது. இன்று விருதுகளை பெறும் மாணவ மாணவிகள் மேலும் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்க எல்லா வல்ல இறைவன் அருள்புரிவராக."*
தலைவரின் உரையைத் தொடர்ந்து சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் அறிமுகம் நடந்தது.

பிறகு விருது வழங்கும் விழா விமர்சையாக தொடங்கியது. முதலில் UPSRல் சிறப்பாக தேர்ச்சியடைந்த 8 மாணவ மாணவிகளுக்கு டத்தின் மல்லிகா காசி பூங்கொத்து வழங்க, அவர்கள் பெயர்கள் பொறிக்கப்பட்ட கேடயத்தை டத்தோ டாக்டர் M. தம்பிராஜா வழங்க, ரொக்கப் பரிசை டத்தோ P. காசி வழங்கினார்கள்.

பிறகு டத்தோ P. காசி அவர்கள் உரையாற்றினார்கள். அவர்களின் உரையில் இருந்து ஒரு பகுதி:-

*"கடந்த 5 ஆண்டுகளாக என் தாயாரின் பெயரில் நடைபெற்று வருகின்ற இந்த விழா ஆரம்பத்தில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது மட்டும் அல்லாமல் இந்த விழா அவர்களுக்கு சிறந்த மதிப்பெண்களை பெற வேண்டும் என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது. இந்த ஆண்டு 10A1 பெற்ற SPM மாணவியை பெற்று இருக்கின்றோம். கடந்த 5 ஆண்டுகளில் நமது சமூகத்தில் 10A1 பெற்ற மாணவியாக இந்த மாணவி திகழ்கிறார், அவருக்கும் இன்று விருதுகளைப் பெறும் 28 மாணவ மாணவிகளுக்கும் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*மேலும் 9வது மலேசியத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டு இருக்கும் வாய்ப்புகளிலே கல்வி முக்கிய இடம் வகிக்கிறது. ஆகவே நம்முடைய மாணவ மாணவிகளும் அதில் முக்கிய பங்கை ஆற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். இந்த விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்து இருக்கும் திரு. M. பழனியப்பன் அவர்களுக்கும், மலேசிய தனவைசிய சங்கத்தின் தலைவர் திரு. M. சின்னத்துரை அவர்களுக்கும், செயற்குழு உறுப்பினர்களுக்கும், முன்னால் தலைவர் திரு M. கிருஷ்ணன் அவர்களுக்கும் எனது சார்பிலும், என் குடும்பத்தினர் சார்பிலும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்".*

பிறகு, சிறப்பு விருந்தினர் டத்தோ டாக்டர் M. தம்பிராஜா அவர்கள் உரையாற்றினார்கள். அவர்கள் உரையில் இருந்து சில பகுதிகள்.

*"இங்கு நடைபெற்றுக் கொண்டு இருக்கின்ற சிறந்த மாணவ மாணவியருக்கு விருது வழங்கும் விழா என்னை உண்மையிலேயே நெகிழ வைத்து விட்டது. இந்த அருமையான விழாவிற்கு என்னை அழைத்த டத்தோ P.காசி அவர்களுக்கும், மலேசிய தனவைசிய சங்கத்திற்கும் என் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*கல்வி என்பது நமது சமுதாயத்திற்கு முக்கியமான ஒன்று மட்டும் அல்ல தேவையான*



*ஒன்றும் கூட. இன்று அமெரிக்கா போன்ற பெரிய நாடுகளிலே நாம் தான் கல்வியிலே சிறந்து விளங்குகின்றோம். நம்முடைய முளையை பெரிய பெரிய வல்லரசுகள் எல்லாம் நன்றாக பயன் படுத்தி வருகின்றன.*

*இன்று விருதுகளை பெறும் அனைத்து மாணவ மணிகளையும் பாராட்டுவதுடன் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த Dato P.காசி அவர்களுக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும், நிகச்சியை சிறப்பாக வழி நடத்திக் கொண்டு இருக்கின்ற திரு. M. பழனியப்பன் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்."*

அதனைத் தொடர்ந்து PMR, SPM மற்றும் GCE O'Level, STPM படிப்பில் சிறப்பாக தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியருக்கும் பூங்கொத்து, கேடயம், ரொக்கப் பரிசும் வழங்கப்பட்டது.

இரவு 7.30 மணி அளவில் இரவு விருந்துடன் நிகழ்ச்சி ஒரு நிறைவை எய்தியது.

**சங்கத்தின் பொன் விழா**

நமது சங்கத்தின் பொன் விழாவை விமர்சையாக கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. இந்த வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்ச்சிக்கு ஒவ்வொரு உறுப்பினர்களிடம் இருந்தும் பெரிய ஆதரவை எதிர்பார்க்கின்றோம். அடுத்த ஆண்டு (2007) நவம்பர் / டிசம்பரில் நடத்துவதற்கு உத்தேசித்து இருக்கிறது.

சங்கத்தின் வரலாறு மற்றும் நம் முன்னோர்களின் வரலாறு போன்றவைகளை தொகுத்து வழங்குவதுடன் இந்த பொன் விழாவில் கலந்து சிறப்பிப்பதற்கு இந்தியாவில் இருந்தும், வெளி நாடுகளில் இருந்தும், முக்கியமானவர்களை அழைக்கவும் திட்டமிட்டப்பட்டு வருகிறது. இது பற்றிய செய்திகள் அவ்வப்பொழுது செய்திக்கடிதத்தில் வெளியிடப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**புதையல் தேடும் போட்டி (16-7-2006)**

எதிர்வரும் 16-7-2006 அன்று சங்கத்தின் ஏற்பாட்டில் புதையல் தேடும் போட்டி ஒன்று நடைபெற இருக்கிறது. இது பற்றிய விரிவான செய்தியினை திரு Y.RM ஆண்டியப்பன் அவர்கள் தனிப் பக்கத்தில் வழங்கி இருக்கிறார்கள். உறுப்பினர்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு இந்த நிகழ்வை ஒரு வெற்றிகரமான நிகழ்வாக நடத்தி தருமாறு செயற்குழுவின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

**கூட்டுறவு கழகத்தின் தொடக்க கூட்டம் (24-6-2006)**
**இடம்: செட்டியார்கள் மண்டபம் கோலாலம்பூர் ஸ்ரீ தெண்டாயுதபாணி ஆலயம்**

எதிர்வரும் 24-06-2006 சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நம் சங்கத்தின்

கூட்டுறவு கழக அமைப்புக் கூட்டம் செந்தூல் செட்டியார்கள் மண்டபத்தில் நடைபெற இருக்கிறது. அதில் திரளாக கலந்து கொண்டு கூட்டுறவு பங்குகளை வாங்கி, கூட்டுறவு உறுப்பினர்களாக சேரும்படி செயற்குழுவின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம். இந்த நிகழ்வில் கூட்டுறவு அதிகாரியும் கலந்து கொள்ள இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இது பற்றிய முழு விபரமும் தனிப் பக்கத்தில் கொடுக்கப்பட்டு உள்ளது.

**சங்க அகப்பக்கம்**

நமது சங்கத்தின் செய்திகளை அகப்பக்கத்தில் படிக்கும் பொருட்டு அகப்பக்கம் வடிவமைக்கப்பட்டு சில அடிப்படை விபரங்கள் அதில் இடம் பெற்று உள்ளது. மேலும் அவ்வப்பொழுது சங்கத்தின் நிகழ்வுகளை அதில் இடம் பெறவும் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. சங்கத்தின் அகப்பக்க முகவரி: http://www.mta.com.my மின் அஞ்சல் முகவரி: thanavaisya@gmail.com. (மின் அஞ்சல் முகவரியில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்).

மீண்டும் அடுத்த செய்திக் கடிதத்தில் சந்திப்போம்.

நன்றி, வணக்கம்.

அன்புடன்,
***பெ. இராமன்***
கௌரவ செயலாளர்

# நன்கொடைக்கு நன்றி

சங்க கட்டிட மரமத்து வேலைகளுக்கு நம் சங்க அறங்காவலர்களில் ஒருவரான திரு G. ராமனாதன் அவர்கள் RM2,000 வழங்கியுள்ளார்கள். அவருக்கு சங்கத்தில் சார்பில் நம் மனமார்ந்த நன்றி.

கடந்த 19-3-2006 அன்று நடைபெற்ற ஆண்டு பொதுக் கூட்டத்தில் டத்தோ SP. அண்ணாமலை அவர்கள் சங்கத்தின் கல்வி அறநிதியை மீண்டும் தொடங்குமாறு வேண்டுகோள் விடுத்தார். மேலும் அதற்கு தம் பங்காக உடனடியாக RM1,001ம், நிதி தொடங்கப்பட்டவுடன் RM 10,000 மும் தருவதாக வாக்குறுதி அளித்தார். அதன்படி RM 1,001 தற்பொழுது அனுப்பி உள்ளார். அவருக்கு சங்கத்தின் சார்பில் நம் நன்றி.





# அழைப்புக்கு நன்றி

சுங்குரும்பை (புக்கிட் மெர்தாஜம்) நாட்டுக் கோட்டை செட்டியார்கள் ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயில் பங்குனி உத்திர திருவிழா 11-4-2006 அன்று சிறப்பாக நடைபெற்றது. இத்திருவிழாவுக்கு சங்கத்துக்கு அழைப்பு அனுப்பிய சுங்குரும்பை நகரத்தார்களுக்கு. நன்றி

பேரா நாட்டுக் கோட்டை செட்டியார்கள் ஸ்ரீ தெண்டாயுதபாணி கோவில் (தெலுக் இந்தான்) சித்ரா பௌர்ணமி திருவிழா 13-5-2006 அன்று சிறப்பாக நடைபெற்றது. இத்திருவிழாவுக்கு சங்கத்துக்கு அழைப்பு அனுப்பிய பேரா நகரத்தார்களுக்கு நன்றி.

ஜாவி ஸ்ரீ தெண்டாயுதபாணி ஆலய சித்திரா பௌர்ணமி திருவிழா 13-5-2006 அன்று சிறப்பாக நடைபெற்றது. இத்திருவிழாவுக்கு சங்கத்துக்கு அழைப்பு அனுப்பிய ஜாவி கோவில் நகரத்தார்களுக்கு நம் நன்றி.

ஈப்போ நகர ஸ்ரீ தெண்டாயுதபாணி ஆலயம் வைகாசி விசாக திருவிழா 9-6-2006 அன்று சிறப்பாக நடைபெறவுள்ளது. இத்திருவிழாவுக்கு சங்கத்துக்கு அழைப்பு அனுப்பிய ஈப்போ நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு நம் நன்றி.

# புதிய கூட்டுறவுக் கழக தொடக்க விழா

சங்கத்தின் ஆதரவோடு அமைக்கப்படவிருக்கும் புதிய கூட்டுறவு கழகமான கோப்பராசி தனவைசிய கோலாலம்பூர் பெர்ஹாட்டின் தொடக்க விழா நிகழ்ச்சி எதிர்வரும் 24-6-2006 சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு செந்தூல் தண்டாயுதபாணி கோவில் மண்டபத்தில் நடைபெற உள்ளது. அது குறித்த முறையான அறிவிப்பு கடிதம் இச்செய்திக் கடிதத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. அனைவரும் திரளாக வந்திருந்து நிகழ்ச்சியை சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கூட்டுறவு கழகத்தில் உறுப்பினராக சேருவதற்கான விண்ணப்ப படிவம் ஏற்கனவே அனைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அதை அனைவரும் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டியது. விண்ணப்பப் படிவம் சங்கத்தின் அகப் பக்கத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

கூட்டுறவு கழகத்தின் மூலம் செய்யக் கூடிய வர்த்தக வாய்ப்புகள் குறித்து ஆராய கடந்த 1-5-2006ம் அன்று இரண்டு கலந்துரையாடல் கூட்டங்கள் நடத்தப்பட்டு தொடர்ந்து மற்ற ஆயத்த பணிகள் நடைபெற்று வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கூட்டுறவு கழகத்தில் ஒருவர் குறைந்த பட்சமாக பங்கு முதலாக RM500ம் நுழைவு கட்டணமாக RM30ம் செலுத்த வேண்டும். ஆனால் லாபகரமான தொழில்களை கொடங்க நமக்கு பங்கு முதல் அதிகமாக தேவைப்படுவதால் அனைவரும் அதிக அளவில் பங்குகளை வாங்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இது வரை கூட்டுறவு கழகத்தில் உறுப்பினர்களாக பதிந்து கொள்ள உறுதி அளித்துள்ளவர்களின் விபரம்:-

| | | RM |
|---|---|---|
| 1. | டத்தோ P. காசி | 100,000.00 |
| 2. | டத்தோ டாக்டர் N. சுப்பிரமணியம் | 20,000.00 |
| 3. | திரு. மோகன் சொக்கலிங்கம் | 15,000.00 |
| 4. | திருமதி விமலா மோகன் | 10,000.00 |
| 5. | திரு. M. சின்னத்துரை | 6,000.00 |
| 6. | திரு. M. கிருஷ்ணன் | 6,000.00 |
| 7. | டாக்டர் A. இராமனாதன் | 6,000.00 |
| 8. | திரு. Y.RM. ஆண்டியப்பன் | 5,000.00 |
| 9. | திருமதி S. சீதாலட்சுமி | 5,000.00 |
| 10. | திரு. N. சோமனாதன் | 3,000.00 |
| 11. | டத்தோ SP. அண்ணாமலை | 2,000.00 |
| 12. | திரு. மா. மெய்யப்பன் | 2,000.00 |
| 13. | திரு. V. சின்ன வள்ளியப்பன் | 2,000.00 |
| 14. | திரு. மா. சேதுராமன் | 2,000.00 |
| 15. | திரு. முரு. கணேசன் | 2,000.00 |
| 16. | திரு. S. பழனியப்பன் | 2,000.00 |
| 17. | டத்தின் டாக்டர் ஜானகி சுப்பிரமணியம் | 2,000.00 |
| 18. | திரு. RM. வைத்திய நாதன் | 1,000.00 |
| 19. | திரு. V. கனகசபை | 500.00 |
| 20. | டாக்டர் SP. சிங்காரம் | 500.00 |
| 21. | திருமதி A. முத்துகருப்பி | 500.00 |
| | | RM192,500.00 |



# Membership Development Committee
# (உறுப்பினர் மேம்பாட்டுக் குழு)

புதிய செயற்குழு பதவியேற்ற பின்னர் சங்கம் நலன்கருதி பல்வேறு புதிய கமிட்டிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவ்வழியில் Membership Development Committee என்று ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் தலையாய நோக்கம் இரண்டு ஒன்று தற்சமயம் உள்ள உறுப்பினர்களிடம் நிலுவையில் இருக்கும் சந்தா பாக்கிகளை வசூலிப்பது. இரண்டாவது உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பது.

**சந்தா டாக்கி:** சந்தா பாக்கி உள்ள உறுப்பினர்களை அடையாளம் கண்டு தொடர்பு கொண்டு அவர்களின் சந்தா பணத்தை வசூலிப்பது. எனவே பாக்கி உள்ள உறுப்பினர்கள் உடனடியாக தாங்களாகவே முன்வந்து பாக்கிகளை செலுத்தி விடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**புது உறுப்பினர்கள்:** நம் சமூகத்தை சேர்ந்த 18 வயதிற்கு மேற்பட்ட மலேசிய குடியுரிமை பெற்று இன்னும் உறுப்பினராகாத நகரத்தார்கள் அடையாளம் கண்டு, நேரடியாக தொடர்பு கொண்டு உறுப்பினராவதின் அவசியத்தை எடுத்து கூறி அவர்களை உறுப்பினராக்குவதே இக்குழுவின் முக்கிய பணி.

எனவே மேற்கூறிய இவ்விரண்டு வழிகளிலும் எங்களுக்கு உதவி, சங்கம் சிறக்க உங்கள் ஒத்துழைப்பை வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

***உறுப்பினர் மேம்பாட்டுக் குழுவிற்காக***
***Y.RM. ஆண்டியப்பன்***

# பாராட்டும் பெருமையும்

உலக குழந்தைகள் தினத்தை முன்னிட்டு கடந்த 25-3-2006 அன்று மலாக்காவில் 2005 ஆண்டுக்கான தேசிய நிலையிலான விழா நடைபெற்றது. இதில் கோலாலம்பூரை பிரதிநிதித்து கலந்து கொண்ட P. லட்சுமணன் அவர்களின் மகன் முத்தரசப்பன் பேறு குறைந்த குழந்தைகள் பிரிவில் சிறந்த மாணவராக விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். அவருக்கு சங்கத்தின் சார்பில் பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

# MTA புதையல் தேடும் போட்டி 2006

வணக்கம்.

நம் சங்க ஏற்பாட்டில் எதிர்வரும் ஜூலை 16ந் தேதி மற்றுமொரு புதையல் தேடும் போட்டி வெற்றிகரமாக நடந்தேற உள்ளது. இதன் நோக்கம், முக்கியமாக நம் சங்கத்திற்கு கணிசமான அளவில் நிதி சேகரிப்பதோடு உறுப்பினர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு பொழுதுபோக்கு நிகழ்வாகவும் அமைய வேண்டும் என்பதே ஏற்பாட்டு குழுவின் விருப்பம்.

இந்நிகழ்வு 16-7-2006 ஞாயிற்றுக்கிழமை அன்று ஒருநாள் நிகழ்வாக கிள்ளான் பள்ளத்தாக்கு பகுதிகளைக்குள்ளாக நடைபெற இருக்கிறது. வெற்றி பெறும் குழுக்களுக்கு முதல் பரிசு RM1,500. இரண்டாம் பரிசு RM1,000, மூன்றாம் பரிசு RM500. மேலும் 15 இதர பரிசுகளும், நோவல்டி பரிசுகளும் உள்ளன.

கடந்த ஆண்டே, நாம் இப்போட்டியை ஏற்பாடு செய்து இருந்தோம் என்றாலும் உறுப்பினர்கள் பதிவு மிககுறைவாகவே இருந்த காரணத்தால், இரண்டு முறை ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனை மனதில் கொண்டு செயற்குழுவின் ஒப்புதலோடு இம்முறை Open Hunt ஆக ஏற்பாடு செய்து இருக்கிறோம். நம் சங்க உறுப்பினர்கள் மற்றுமின்றி ஏனையோரும் கலந்து கொள்ளலாம். உங்கள் நண்பர்கள், அலுவலக சக ஊழியர்கள் மற்ற இன நண்பர்கள் யாவரும் கலந்து கொள்ளலாம்.

ஒரு காரில், குறைந்தது இருவர் முதல் அதிகபட்சம் நால்வர் கலந்து கொள்ளலாம். ஒரு காரில் கலந்து கொள்ளும் போட்டியாளர்கள் அனைவரும் நம் சமூகத்தினர் என்றால், நபர் ஒன்றுக்கு நுழைவு கட்டணம் RM50. அதே நேரத்தில் மற்றவர்கள் கலந்து பங்கேற்றால் அக்காரில் உள்ள எல்லா போட்டியாளர்களுக்கும் நபர் ஒன்றுக்கு கட்டணம் RM60 வீதம் வசூலிக்கப்படும்.

பங்கு பெற்றவர்கள் பரிசாக ரொக்கத்தை தட்டி செல்வதோடு மற்ற பரிசுகளையும் வெற்றி பெற வாய்ப்பு உள்ளது. பதிவு செய்யும் அனைவருக்கும் Goodies Bag மற்றும் T-shirt வழங்கப்படும். மாலையில் வெற்றியாளர்களை அறிவிக்கும் விழாவில் High Tea வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நீங்கள் செலுத்தும் நுழைவு கட்டணம் RM50க்கு நிறைவான அளவில் இவை இருக்கும். இப்போட்டியில்



பங்கேற்பதன் வழி உங்கள் பணத்துக்கு நிறைவான சேவையையும், பரிசுகளை வெல்வதற்கான வாய்ப்பையும் பெறுவதோடு உங்கள் நாளை மகிழ்ச்சியுடனும் அறிவிப்பூர்வமாகவும் பயனுள்ள வழியில் செலவிட அறிய சந்தர்ப்பம்.

இதற்கான விண்ணப்ப பாரம் மின்அஞ்சல் மூலம் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது. ஆர்வ-முள்ளவர்கள் திரு. Y.RM ஆண்டியப்பன் 013-394 35 35, திரு M. சேதுராமன் 019-381 96 73, திரு. N. ரவி 013-3909794 தொடர்பு கொண்டு விளக்கம் பெறலாம். இது ஒரு Open Hunt என்பதால், தாங்கள் பங்கு பெறுவதோடு உங்கள் மற்ற நண்பர்களையும் கலந்து கொள்ள செய்ய வேண்டுமாய் கேட்டு கொள்கிறோம்.

இதற்கான விண்ணப்ப பாரங்கள் http://www.geocities.com\machunter_koo என்ற அகப்-பக்கத்தில் உள்ளது. தேவைப்படுவோர் இதனை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இந்நிகழ்விற்கான பங்கேற்பு பதிந்து கொள்பவர்களுக்கு மட்டுமே என்பதால் விரைந்து பதிவு செய்து போட்டி அன்று வெற்றி கனியை தட்டி செல்லுங்கள்.

ஏற்பாட்டுக் குழு
MTA புதையல் தேடும் போட்டி 2006

# புது மகவின் வரவு




கோலாலம்பூர் M. அருணாசலம்-ஜானகி (உ.எ: 351/ப.எ: 106) தம்பதிகளின் மகன் சோமசுந்தரம்-லட்சுமி தம்பதிகளுக்கு கடந்த 12-3-2006 அன்று ஆண் குழந்தை பிறந்துள்ளது. குழந்தைக்கு ஏகலைவன் சுப்பிரமணியம் என்று பெயரிட்டுள்ளார்கள். செல்வன் ஏகலைவன் சுப்பிரமணியம் கோத்தாபாரு S.KL. மணி-மீனாட்சி (உ.எ: 406/ப.எ: 164) தம்பதிகளின் மகள் வழிப் பேரனும் ஆவார்.

சிங்கப்பூர் Dr. R. நாச்சம்மை-வெங்கடாசலம் (உ.எ: 1045/ ப.எ: 206) தம்பதிகளுக்கு கடந்த 22.10.05 அன்று ஆண்குழந்தை பிறந்துள்ளது. குழந்தைக்கு ராமு வெங்கடாசலம் என்று பெயரிட்டுள்ளார்கள். செல்வன் ராமு வெங்கடாசலம் அலோர்ஸ்டார் Dr. KMS. ராமசாமி விசாலாட்சி (உ.எ: 440/ப.எ: 272) தம்பதிகளின் மகள் வழி பேரனும் ஆவார்.

***குழந்தைகள் எல்லாச் செல்வங்களும் பெற்று சீரும் சிறப்புடன் வாழ சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.***

அங்கத்தினர்கள் எல்லோருக்கும் புதிய நிர்வாக குழுவின் சார்பில் என்னுடைய வாழ்த்துக்களை கூறுவதோடு எங்கள் அனைவரையும் ஏகமனதாக தேர்ந்து எடுத்ததற்கு எங்களுடைய நன்றி.

சம் சங்க முன்னால் தலைவர் உயர்திரு மெ. கிருஷ்ணன் அவர்களும் அவருடைய நிர்வாக குழு உறுப்பினர்களும் மிகச் சிறப்பான முறையில் செயல்பட்டு, நம் சங்கத்தை ஒரு சிறந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளார்கள். இவர்கள் எல்லோருக்கும் நம்முடைய நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழ. உமையாள் ஆச்சி கல்வி விருது நிகழ்ச்சி ஏப்ரல் மாதம் 30-ம் திகதி அன்று மிக விமரிசையாக நடத்தப்பட்டதற்கு நம் சங்கம் சார்பாக நான்:-

- நிகழ்ச்சிக்கு முழுமையான பொருளாதார உதவி செய்துவரும் உயர்திரு டத்தோ P. காசி அவர்களுக்கும்
- சிறப்பு விருந்தினர் உயர்திரு டத்தோ டாக்டர் M. தம்பிராஜா அவர்களுக்கும்
- ஏற்பாட்டுக் குழு தலைவர் உயர்திரு M. பழனியப்பன் அவர்களுக்கும்
- ஏற்பாட்டுக் குழு அங்கத்தினர்களுக்கும்
- விருதுகள் பெற்ற மாணவர் மாணவிகளுக்கும் அவர்தம் பெற்றோர்களுக்கும்
- நிகழ்ச்சிக்கு திரளாக வருகை தந்த




அனைவருக்கும் நன்றியையும் வாழ்த்துக்களையும் கூறுவதில் மிகப் பெருமையடைகிறேன்.

நம் சங்க கல்வி நிதிக்கும் உயர்திரு டத்தோ SP. அண்ணாமலை அவர்கள் நன்கொடையாக வெள்ளி 1001 வழங்கி உள்ளார்கள். நம் சங்க அரங்காலவர்களில் ஒருவரான உயர்திரு G. ராமனாதன் அவர்கள் நம் சங்க கட்டிடத்தைப் பழுது பார்ப்பதற்காக வெள்ளி 2000-ம் நன்கொடையாக கொடுத்துள்ளார்கள் இவர்கள் இருவருக்கும் மிக்க நன்றி.

நம் சங்கத்தின் அடுத்த ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்கு முன்பாக இன்னும் 200 பேர்களை உறுப்பினர்களாக்க வேண்டும் என்ற உறுதியுடன், நம் சங்கத் துணைத்தலைவரும், அங்கத்தினர்கள் மேம்பாட்டு குழு தலைவராகிய உயர்திரு ஆண்டியப்பன் அவர்களும் அவர்தம் குழுவினரும் பெறும் முயற்சி செய்து வருகிறார்கள். இந்த முயற்சிக்கு தாங்கள் எல்லோரும் உதவி செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

நம் குடும்பத்திலேயே நம் சங்கத்தில் உறுப்பியம் பெறுவதற்கு தகுதியானவர்கள் பலபேர் இருக்கின்றார்கள்.



18 வயது பூர்த்தியாகி, பல்கலைக் கழகங்களில் மாணவர்களாக இல்லாதவர் அனைவரும் நம் சங்கத்தில் உறுப்பியம் பெற தகுதியுள்ளவர்கள் ஆவர்.

நண்பர்களே, நமது சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு மட்டும் ஒரு கூட்டுறவுக் கழகம் நிறுவுவதற்கான அனுமதியை அரசாங்கக் கூட்டுறவுக் கழக மேம்பாட்டு பிரிவு வழங்கியுள்ளது. இந்த கூட்டுறவுக் கழகத்தின் அமைப்புக்கூட்டம் ஜூன் மாதம் 24-ம் திகதி, நம் செந்தூல் கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அங்கத்தினர்கள் அனைவரும் இந்தக் கூட்டுறவுக் கழகத்தில் சேருவதோடு, அமைப்புக் கூட்டத்திற்கும் வந்து ஆதரவு கொடுக்க பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நம் சங்க பொன்விழாவை அடுத்த வருடம் நவம்பர் அல்லது டிசம்பர் மாத வாக்கில் மிக விமரிசையாக நடத்துவற்கு திட்டமிட்டு சங்க செயற்குழு உறுப்பினர்கள் நிகழ்ச்சியின் வடிவமைப்பில் ஈடுபட்டுள்ளார்கள். எல்லாவித ஏற்பாடுகளும் முழுமையாக முடிவு செய்யப்பட்டவுடன் அங்கத்தினர்களுக்கு அறிவிக்கின்றோம்.

சங்கத்தின் மேம்பாட்டிற்கு அங்கத்தினர்கள் அனைவருடைய ஒத்துழைப்பு மிக மிக அவசியம்.

அங்கத்தினர்கள், சங்க வளர்ச்சிக்கு என்னுடனோ, நிர்வாக குழு அங்கத்தினர்களோடு அல்லது வட்டார செயலாளர்களோடு தொடர்பு கொள்வதை நாங்கள் மிக ஆவலோடு எதிர்-பார்க்கிறோம். என்னுடைய email address: valathi365@yahoo.com
நன்றி. வணக்கம்.

**M. சின்னத்துரை, தலைவர்**

# புதிய ஆயுள் உறுப்பினர்கள்

| உ.எண் | ப.எண் | Name |
|---|---|---|
| 851 | 152 | S. Lakshmanan, Kuala Lumpur |
| 905 | 98 | S.Anitha, Subang Jaya |
| 991 | 158 | Lakshmi @ Vimala, Petaling Jaya |
| 1071 | - | R.Palanaiappan, Shah Alam |
| 1072 | - | S.Periakaruppan, Subang Jaya |
| 1073 | - | Dr.Kulanthaian, Kajang |
| 1074 | - | Ponny @ Meenatchi, Puchong |
| 1075 | - | Menaka Alamelu Meyyappan, Petaling Jaya |
| 1076 | - | A.Gandhinathan, Penang |
| 1077 | - | C.Vallikannu, Seremban |

# புதிய உறுப்பினர்•ள்

**உ.எண்: 1069**

R.Meenatchi
36, Jalan Terasek Dua
Bagnsar Baru
59100 Kuala Lumpur
Tel.: 03-2284 8829
016-209 0516

**உ.எண்: 1070**

M.Nallakaruppan
1032, Jalan Haruan 19
Taman Oakland, Phase 3
70300 Seremban
Tel.:06-601 3614
012-672 2981

**உ.எண்: 1071**

R.Palaniappan
6 Jln Selamat 25/93,
Taman Sri Muda
40000 Shah Alam
Tel.: 03-5121 9887
017-882 8457

**உ.எண்: 1072**

S.Periakaruppan
41, Jalan USJ 2/2M
Subang Jaya,
47600 Petaling Jaya
Tel.: 03-5634 4824
016-205 3505

**உ.எண்: 1073**

Dr.Kulanthaian
B-1-8 Parcel 5,
Sri Ria Apartments
Taman Sepakat Indah
Sungai Chu, 43000 Kajang

**உ.எண்: 1074**

T.Ponny @ Meenatchi
No.41, Jalan PU 12/3
Taman Puchong Utama,
47100 Puchong
Tel.: 03-8060 6526
012-3246290

**உ.எண்: 1075**

Menaka Alamelu Meyyappan
1 Jln 12/11, Section 12, 46200 P. Jaya
Tel.No.044-208 838 4389

**உ.எண்: 1076**

A.Gandhinathan
50B-08-08, U Garden,
Persiaran Minden Satu,
11700 Gelugor, Penang
Tel.No.04-657 8790
019-4445385

**உ.எண்: 1077**

C.Vallikannu
365, Bukit Rasah,
70300 Seremban
Tel: 06-7623516





# புதுமணத் தம்பதிகள்

**கோ**லாலம்பூர் (தமிழகம் பி. அளகாபுரி) வெ. ஜானகிராமன் - தெய்வானை (உ.எ: 213/ப.எ: 128) தம்பதிகளின் மகள் சிவகாமசுந்தரி (எ) சிவகாமிக்கும் ஆத்தகுங்குடி ஆறு அழகப்பன் செட்டியார் அவர்களின் மகன் டாக்டர் நடராஜனுக்கும் கடந்த 1-5-2006 அன்று தமிழகம் பி. அளகாபுரியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

**கோ**லாலம்பூர் (தமிழகம் சொக்கநாதபுரம்) சோம. நாராயணன்-லட்சுமி (உ.எ: 431/ப.எ:224) தம்பதிகளின் மகள் வள்ளியம்மை (எ) நாச்சுக்கும் காரைக்குடி லெ. நாச்சியப்ப செட்டியார் அவர்களின் மகன் அழகப்பனுக்கும் இன்றைய தினம் 1-6-2006 தமிழகம் சொக்கநாத புரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெறுகிறது.

**கோ**லாலம்பூர் (தமிழகம் மிதிலைப்பட்டி) நா. அடைக்கப்பன் (எ) மணி செட்டியார்-மீனாட்சி தம்பதிகளின் மகள் பெரிய கருப்பன் (எ) முத்துக்குமாருக்கும், தமிழகம் மிதிலைப்பட்டி சொ. பழனியப்ப செட்டியார் அவர்கள் மகள் மெய்யம்மை (எ) மாலதிக்கும் இன்றைய தினம் 1-6-2006 தமிழகம் மிதிலைப்பட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெறுகிறது.

**கோ**லாலம்பூர் (தமிழகம் காரைக்குடி) மெ. கிருஷ்ணன்-மீனா (உ.எ:773/ப.எ: 146) தம்பதிகளின் மகன் மெய்யப்பனுக்கும் தமிழகம் கொப்பனாபட்டி அ. நாராயணன் செட்டியார் அவர்களின் மகள் நாச்சம்மை (எ) ஜெனனிக்கும் 8-6-2006 அன்று கொப்பனாப்பட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற உள்ளது.

**மெ**ர்லிமாவ் (தமிழகம் இராங்கியம்) N. பூமிநாதன்-வள்ளிக்கண்ணு (உ.எ: 391/ப.எ: 252) தம்பதிகளின் மகன் நாராயணனுக்கும் தமிழகம் சக்கந்தி சுப. சோமசுந்தரம் செட்டியார் அவர்களின் மகள் வித்யாவுக்கும் 14-6-2006 அன்று சக்கந்தியில் திருமணம் நடைபெற உள்ளது.

**புதுமணத் தம்பதிகள் வாழ்வில் எல்லா நலன்களும் பெற்று இன்பமுடன் பல்லாண்டு வாழ சங்கம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.**

## Malaysian Thanavaisya Association
## PL.Umayal Achi Academic Excellence Awards 2006

At a glittering ceremony held at the Tan Sri Soma auditorium in Kuala Lumpur, twenty eight students from various parts of the country were awarded due recognition for their outstanding performance in examinations held in 2005. The occasion was graced by the presence of the guest of honour Dato Dr.M.Thambirajah of Sri Murugan Centre.

His short but inspiring message captivated the 250 odd audience who witnessed the award presentation along with the patron Datuk P.Kasi and Datin Malliga Kasi.

This was the first function to be organized by the newly elected management committee of the association. The President Mr.Chinnadurai introduced his team following his welcome address. After prayers, the ceremony commenced with a colourful dance performance by Miss.Valliammai Chidambaram who was also one of the award recipients.

Miss Meenakshi Alagappa of SMK Puteri, Seremban was given a special recognition for achieving 10 straight A's in the SPM. For her record breaking feat Meenakshi received an additional trophy and six books personally selected by Dauk.P.Kasi.

Mrs.Radha Ganesan who co hosted the function for the first time did a fine job during her dialogue session with the UPSR and PMR students. The youngsters showed no signs of nervousness, in fact many of them spoke with determination and were quite hilarious at times. The dialogue session with SPM//'A' Level/ Matriculation students proved to be very interesting as most of the recipients were daring and outspoken.

I wish to thank Dato Dr.M.Thambirajah for his encouraging words and inspiring message. Besides sponsoring the event Datuk P.Kasi and Datin Malliga Kasi have never failed to provide moral support to the recipients as well as the organizing committee each year.On behalf of the Association I wish to thank them for their generous contribution and guidance. Over the years the PL.Umayal Achi Academic excellence awards has gained momentum and popularity due to the support of the members of the Association.

The organizing committee and the management committee should also be commended for their unselfish contribution and hard work.The function was a great success simply because of the excellent co-ordination and understanding between members of the organizing committee. Finally I would also wish to thank the many others who contributed to the success of this function.

***M.Palaniappan***
*Chairman – Organizing Committee*



# சமையல் குறிப்பு

## வெஜிடபள் மட்டன் பிரியாணி

**தேவையான பொருட்கள்:**

| | | |
|---|---|---|
| பாசுமதி அரிசி | : | 2 கப் |
| சிறிய வெங்காயம் | : | 20 அரைத்துக்கொள்ளவும் |
| இஞ்சி பூண்டு விழுது | : | சிறிதளவு |
| பட்டை, கிராம்பு, இலை | : | தாளிக்க |
| புதினா, மல்லி தழை | : | அரைகப் |
| பச்சை மிளகாய் | : | 2 இரண்டு |
| தயிர் | : | அரைகப் |
| வெஜிடேரியன் மட்டன் | : | 1/2 கப் வறுத்து எடுத்துக் கொள்ளவும் |
| நெய் | : | 1 டேபிள் ஸ்பூன் |
| பெ. வெங்காயம் | : | 2 நீளமாக வெட்டிக்கொள்ளவும் |
| தக்காளி | : | 2 நீளமாக வெட்டிக் கொள்ளவும். |

**செய்முறை:**

வாணலியில் நெய் ஊற்றி பட்டை, கிராம்பு, இலை (சோம்பு-பிரியப்பட்டால்) போட்டு தாளிக்கவும். வெங்காயம் இஞ்சி பூண்டு போட்டு வதக்கியவுடன், தக்காளி போட்டு தாளிக்கவும். பச்சை மிளகாய் அப்படியே போடவும் (கீற வேண்டாம்). மிளகாய் தூள் போடவும். சின்ன வெங்காயம் அரைத்ததை போட்டு வாசம் வரும்வரை வதக்கவும். புதினா மல்லித்தழை போட்டு வதக்கவும். பிறகு அரிசியைப் போட்டு சிறிது நேரம் வதக்கவும். தயிர் ஊற்றியவுடன் 3 கப் தண்ணீர் ஊற்றி ஒரு பாத்திரத்தில் மாற்றி பிரஷர் குக்கரில் வைக்கவும், மேலே மட்டனை தூவி உப்பு போட்டு கிளறி 2 விசில் வந்தவுடன் இறக்கவும்.

***(கடந்தாண்டு நடைபெற்ற மகளிர் மட்டும் நிகழ்ச்சியில் மேற்குறிப்பிட்ட சமையல் குறிப்பை செய்து காட்டியவர் திருமதி சுதா லட்சுமணன்)***

## KOPERASI THANAVAISYA KUALA LUMPUR BERHAD

c/o Persatuan Thanavaisya Malaysia
Wisma Thanavaisya, 23-A, Tingkat 1, Jalan Pinggir,
Batu 2½, Jalan Ipoh, 51200 Kuala Lumpur.

Tarikh: 1hb. Jun 2006

Kepada,
Ahli-ahli Persatuan Thanavaisya Malaysia

Tuan/Puan,

**NOTIS MESYUARAT AGUNG PERMULAAN**

Sukacita dimaklumkan bahawa Koperasi Thanavaisya Kuala Lumpur Berhad akan mengadakan Mesyuarat Agung Permulaannya pada tarikh dan tempat seperti berikut:-

**Tarikh : 24hb. Jun 2006 (Hari Sabtu)**
**Masa : 3.30 petang**
**Tempat : Dewan Chettiars, Sentul, Kuala Lumpur.**

2. **Agenda Mesyuarat:**
(1) Perlantikan Pengerusi mesyuarat
(2) Persetujuan menubuhkan Koperasi
(3) Penerimaan Undang-undang Kecil
(4) Permohonan bagi didaftarkan sebagai Koperasi
(5) Perlantikan Lembaga dan memberi kuasa bagimenandatangani permohonan pendaftaran.

3. Tuan/puan dijemput hadir.

Sekian, terima kasih.

T.T.
(M. Meyyappan)
Setiausaha Jawatankuasa Penaja Koperasi

s.k. Tuan Pendaftar
Jabatan Pembangunan Koperasi Wilayah Persekutuan
Tingkat 9, Pertama Kompleks
Jalan Tuanku Abdul Rahman
50100 Kuala Lumpur.



## MALAYSIAN THANAVAISYA ASSOCIATION

**Wisma Thanavisya, 23A Jalan Pinggir,**
**Batu 2 ½ Off Jalan Ipoh, 51200 Kuala Lumpur**

Minutes of the 23rd Annual General Meeting of the Association held at Chettiar's Hall, Sri Thandayuthapani Temple, Jalan Ipoh, Kuala Lumpur on Sunday 19th March 2006
at 5.45 p.m.

**PRESENT: Ninety Two Members**

1. The President Mr.Krishnan called the meeting to order at 5.45 p.m. after confirming necessary quorum was present.

2. The Secretary Mr.M.Meyyappan read the notice convening the meeting.

3. **President's address**
In his address Mr.Krishnan highlighted the following:

    1. The settlement of building loan in 2004
    2. Completion of painting the entire building in 2005.
    3. Hosting of Felicitation function to congratulate the five 'Datuk' title recipients in 2005
    4. Successfully hosting the Third MTA Sports carnival in January 2006.
    5. Launching of the MTA website and congratulated the Secretary Mr.Meyyappan who was instrumental in developing the site.
    6. Informed that a provisional approval letter has been received for setting up the Koperasi Thanavaisya Kuala Lumpur Berhad and praised Mr.M.Chinndurai for his efforts in forming the co-operative society.
    7. Thanked all those who helped him in settling the building loan.
    8. Thanked the Secretary Mr.Meyyappan for his efforts in the smooth running of the association.
    9. Thanked the members of his Management Committee for all their valuable assistance which was the main reason for the success of his term as President of the association.
    10. Thanked the Trustees of the association for their concern for the well being of the association.
    11. Thanked the sponsors of various programmes.

4. **Approval of the minutes of the 22nd Annual General Meeting**
The Secretary read the minutes of the 22nd Annual General Meeting of the association held on 27th March 2005. After amending certain typo

graphical errors, it was duly adopted at the proposal of Ir.RM.Suppiah and seconded by Mr.S.Murugappan

5. **Adoption of Management Committee's report for 2005-06**
The Secretary Mr.M.Meyyappan read the annual report of the Management Committee for 2005-06. It was adopted at the proposal of Datuk Dr.N.Subramaniam and seconded by S.Palanaiappan.

6. **Adoption the annual accounts for the year ended 31st December 2005**
The Treasurer Mr.N.Nagarajan read the accounts and asked whether there are any questions on the accounts.

Mr.A.K.A.CT.V.CT.AL.Venkatachalam

1. Suggested to remove fully depreciated assets from the fixed assets schedule.
2. When the Fixed deposit will be built up to match the Life membership fund.
The president Mr.Krishnan replied as of that day RM25,000 has been placed in fixed deposit . It will be possible to place about RM15,000 each year. So in about four years time the fund can be built up.
3. Why the annual report and accounts were sent only ten days before the meeting and not twenty one days before the meeting
The Secretary Mr.M.Meyyappan read the association's constitution regarding the notice period and said they have complied with the requirements of the constitution.
Mr.Krishnan added that a provisional notice was sent twenty one days before the meeting asking for resolutions for which Mr.Venkatachalam replied that he did not receive that notice. Mr.Krishnan informed that Mr.Venkatachalam's suggestions will be considered in future years to send the annual report and accounts together with the provisional notice, twenty one days before the meeting.
4. Informed, it will be better to discuss the resolutions (if any, received) before the election of the new management committee.
Datuk Dr.N.Subramaniam informed that, it will be only proper if it is taken up after the election because then only the new management committee can implement the decisions.
During the discussion of the above issues,



Mr.M.Chidambaram said since the Minutes and Annual report have been adopted, the question of whether proper notice period was given should not be raised now.
Datuk SP.Annamalai advised, after asking a question the members should sit down to allow the President to answer the question.

Mr.M.Chidambaram
1. How many years a member should pay annual subscription before becoming a life member.
Mr.Krishnan informed there is no such ruling and it is up to member to decide when he wants to become a life member and a member can straight away become a life member upon joining the association.
2. Highlighted that the association's income is very much less compared to its expenses and without additional fund raising measures it will be not possible to meet the expenses.
Mr.Krishnan agreed with him and said definitely it will not be possible to meet the expenses of the association from the subscription income alone.
3. Wanted to know, why the annual subscription income for 2005 is so low, this works to only about 20 % of the subscription due from the 191 ordinary members
Mr.Krishnan informed that most of the ordinary members are not regular in paying up their subscriptions and this is the reason for the low subscription income.

Mr.C.Sekar

Suggested that considering the cost incurred in sending the newsletters, it will be advisable to send the newsletter through e-mail to those who are IT literate so that cost can be cut down.

Mr.Krishnan answered that since our volume is very low, there will not be any substantial savings if we decide to print less number of copies. He also added that already the association has started positing the newsletter in the website. If all the members are agreeable to the proposal of sending the newsletter through e-mail or posting at the web site, then the association may consider doing away with sending a hard copy of the newsletter to the members.

After this there were no questions from the floor and the accounts for the year ended 31st December 2005 were adopted at the proposal of Mr.K.Palaniappan and seconded by Mr.C.Mohan.

7. The Secretary Mr.Meyyappan informed that with the adoption of the accounts, their two year term has come to an end. He proposed the Trustees of the association Mr.G.Ramanathan and Ir.SP.Thiagarajan be appointed as officials to conduct the election of the new management committee. This proposal was unanimously accepted by the members present.

Mr.Krishnan thanked all the members for giving him and his management committee the opportunity to serve them for the last six years. The outgoing management committee was given a thunderous applause by the members present.

**8. <u>ELECTION OF NEW MANAGEMENT COMMITTEE</u>**

Ir.SP.Thiagarajan asked the members view, whether they wanted to elect the new management committee through en-bloc nomination or through individual nomination for various positions.

Datuk Dr.N.Subramaniam proposed to elect the new management committee through en-bloc nomination which was duly seconded by Mr.M.Chidmbaram. Mr.M.Chidambaram requested the proposed members to stand up and confirm their nomination before voting.

Since, there were no other proposals regarding conducting the elections, Ir.SP.Thiagarajan announced that the election will be carried out through en-bloc nomination and requested the members present to propose names for various positions.

Dr.S.Somasundaram proposed the following names

| **Position** | **Name** | **M.No** |
|---|---|---|
| **President**: | M.Chinnadurai | 240 |
| **Vice President**: | Y.RM.Andiappan | 420 |
| **Secretary**: | P.Raman | 796 |
| **Assistant Secretary**: | M.Nallakaruppan | 1070 |
| **Treasurer**: | S.Palaniappan | 674 |
| **Assistant Treasurer**: | R.Palaniappan | 1071 |
| **Committee Members**: | M.Krishnan | 773 |
| | M.Palaniappan | 229 |
| | M.Meyyappan | 666 |
| | AR.Subramaniam | 625 |
| | N.Somanathan | 681 |
| | Dr.S.Arun | 942 |
| | Vimala Mohan | 991 |



| | | |
|---|---|---|
| | Meenatchi Ramanathan | 1069 |
| | Alagammai Lakshmanan | 1053 |
| **Hon. Internal Auditors**: | K.Palaniappan | 37 |
| | T.Ravi | 950 |

Datuk Dr.N.Subrmaaniam seconded the above proposal.
Dr.A.Ramanathan proposed that nominations be closed and it was seconded by Mr.M.Sethuraman.
Mr.M.Chidambaram suggested that Mr.M.Krishnan be appointed as Honorary Advisor instead of being elected as Committee Member. Ir.SP.Thiagarajan said that there are no provisions in the constitution to make such appointment.
Since, there were no other nominations, Ir.SP.Thiagarajan declared that the above management committee has been elected unanimously for the new two year term.
Mr.G.Ramanathan thanked the members for appointing them to conduct the elections and welcomed the new management committee to take their positions.

9. The newly elected President Mr.MChinnadurai, then addressed the members. He thanked the members present for electing him and his management committee. He said that the association will celebrate its 50th Anniversary next year. He recorded his appreciation for the efforts put in by the out going management committee and thanked Mr.M.Krishnan and his committee for all their efforts in taking the association to new heights. He added that they have given him the association in a golden platter. He also thanked Datuk Dr.N.Subramaniam for his foresightedness and being instrumental in buying the association's building. He assured the members that he will try to implement all possible measures for the benefit of the members. He informed that he has set up a new e-mail account and told members to feel free to communicate with him if they have any suggestions.
He briefed about the proposed Koperasi Thanavaisya Kuala Lumpur Berhad which has been given provisional approval by the authorities. He talked about the benefits of becoming a member of it. He requested the members to join in large numbers and help each other which is the basis of co operative movement.
He requested the members to co-operate with him, which is very essential in smooth running of the association.

10. The next item on the agenda was to consider any other business of which ten days notice in writing has been given to the Hon. Secretary. The outgoing Secretary Mr.M.Meyyappan informed that he has not received any resolutions by the appointed dateline.

11. The last item on the agenda was General. Mr.Chinndurai welcomed the members to voice their views.

Dr.S.Somasundaram
Proposed a committee be formed immediately to organize the Golden Jubilee Celebration's of the association

Dato SP.Annamalai
1. Suggested that the finance minister of India Mr.P.Chidambaram be invited to attend the Golden Jubilee celebration.
2. Requested to revive the Education Fund and agreed to contribute RM1,000 immediately and promised to contribute another RM10,000 after the fund has been revived.
3. Suggested to set up a Old Folks Fund to help to repatriate old folks who are stranded in Malaysia due to lack of financial resources. He also agreed to contribute to that fund after it has been set up.

Mr.M.Krishnan
1. Agreed to contribute RM5,000 to the Education Fund after it has been revived.
2. Requested members to send in whatever information they have regarding the association which will be of great help in writing the history of the association.

Mr.G.Ramanathan
Informed that at the time of purchasing the association's, building, the amount in fixed deposit representing the life membership fund was uplifted. Since, now the building loan has been settled, to take necessary measures to build up the fixed deposit to the required level.

Ms.Thenmalar Meyyappan
Talked about the importance of getting the younger generation aware of the history, culture and traditions of the nagarathar community and suggested positive steps should be taken by the association to achieve this.



Mr.M.Ganesan
1. Suggested the Golden Jubilee should be celebrated in a grand manner and nagarathar delegates from all over the world should be invited to take part in it.
2. To prepare a documentary film on the history of association and nagarthars in Malaysia.

The President Mr.Chinnadurai thanked the members for their views and promised that due consideration will be given to all their suggestions.

12. There being no other matters the meeting ended at about 7.30p.m.with a vote of thanks proposed by the Secretary Mr.P.Raman

**CONFIRMED BY:**

| (Signed) | (Signed) |
|---|---|
| ........................................... | .......................................... |
| M.Chinnadurai<br>President | P.Raman<br>Secretary |

## முகவரி மாற்றம்

உ.எண்:737 / ப.எண்:324
S.Subramanian
A - 3A- 3 Mont Kiara Aman
Jalan Kiara 2
Mont Kiara
50480 Kuala Lumpur
Tel. No. 03-6201 2425

உ.எண்: 832/ப.எண்:334
Dr.J.Thanneemalai
8 - 1 Parkville Town House
PJU 3/33 Sunway Damansara
47810 Petaling Jaya
Tel. No. 03-7803 1210

உ.எண்: 852/ப.எண்: 286
M.Seethalakshmi
10-11, 10th Floor,
Mines Lodge
Pangsapuri Seri Indah
Jalan Sg. Besi Seri Indah 3
43300 Seri Kembangan
Tel. No. 03-8945 7637

### தொலைபேசி எண் மாற்றம்

உ.எண்: 246/ப.எண்:148
RK.Krishnappan
Tel No.03-3363 2981